# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 5 இதழ் : 3 பிப்ரவரி 2026



SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

# உங்கள் கனவு இல்லம் இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!




SREE VISALAM CHIT FUND LTD
SVCF
ESTD 1947
79th YEAR

**1 இலட்சம் சீட்டு**

முதல்

**கோடி சீட்டு**

**வரை....**

ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

79th YEAR

**நம்பிக்கை, நாணயம், நேர்மை**

நிலையான தன்மையுடன், வாடிக்கையாளர் சேவையில்...

எங்களை, ஊக்குவிக்கும் வாடிக்கையாளர்கள்

**அனைவருக்கும் நன்றி**

+91 8667003356 | 04565 283 477 WWW.SREEVISALAM.COM


SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

பிப்ரவரி 2026

மலர் : 5  இதழ் : 3

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---



கட்டுரைகள் மற்றும் இதர

படைப்புகளுக்கு

படைப்பாளர்களே பொறுப்பு.

விளம்பரங்கள் விளம்பரதாரரின்

பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

ஒவ்வொரு விசேஷத்திலும் நம் வீட்டு வளவுக்குள் நமது உறவுகளைச் சந்தித்து மகிழ்வு கொள்வதைப் போல், ஒவ்வொரு மாதமும் இம்மலர் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி!

இன்றளவும் நகரத்தார் பெருமக்களின் இஷ்ட தெய்வமாக விளங்குபவன் முருகனே." செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை" என்றும், வேலை வணங்குவதே வேலை என்றும் வாழ்ந்தவர்கள் நகரத்தார்கள்.

முருகனை கொண்டாடும் விதமாக சென்ற இதழில் முருகனின் முதல் கற்றளிக் கோவிலான கண்ணனூர் அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமண்யர் திருக்கோயில் குறித்து நமது இதழில் வெளிவந்த கட்டுரை செய்தி கண்டு நகரத்தார்கள் பலரும் மேற்படி கோவிலுக்கு வருகை தந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் வாயிலாக கேட்டு அறிந்தும் முருகனருளை பெற்றுத் தொடர்கிறார்கள். இந்த ஊர் அன்று நம் நகரத்தாரகளின் 96 ஊர்களில் ஒன்றாக இருந்தது என்பது அனைவரும் அறியாத செய்தி.

முருகனை அனுதினமும் வழிபடுபவர்கள் நம்மவர்கள். ஊர் கூடித் தேர் இழுப்பது போல் இந்த ஆலயத்தை அனைவரும் அறியும் வண்ணம் செய்வது நமது கடமை.

வழக்கம் போல் மொழி, பண்பாடு, கலாச்சாரம், சமூகப் பணிகள், நிகழ்வுகள், என பன்முகப் பகிர்வாய் நமது இதழ் தனது பங்களிப்பை தொடர்கிறது . வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக அண்மையில் மின்னிதழின் MOBILE APP வெளியிடப்பட்டு தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது.

மேலும் அனைவரது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டு நமது மின்னிதழில் தேவையான மாற்றங்களை அவ்வவ் போது செய்த வண்ணம் இருக்கின்றோம்.

நகரத்தார்களிடையே வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடங்கிய எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.


'இது நமது பத்திரிக்கை, நம் எண்ண வெளிப்பாடு என்று நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள் . மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்.

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

# MOST TRUSTED CHIT FUND COMPANY AWARD

## Most Trusted Chit Fund Company – 2025

V–Connect (விகடன் குழுமம்) நடத்திய Pinnacle Awards 2025 நிகழ்வில்,
நமது நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.AR. உமாபதி அவர்கள் மற்றும்
மரியாதைக்குரிய இயக்குநர் திருமதி AR. மீனாட்சி அவர்களும்
"2025 ஆம் ஆண்டின் மிகவும் நம்பகமான சிட் ஃபண்ட் நிறுவனம்
(Most Trusted Chit Fund Company – 2025)"
என்ற மதிப்புமிக்க விருதை, தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சமூக நலன் மற்றும்
மகளிர் அதிகாரமளிப்பு துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்களிடமிருந்து
பெற்றுக் கொண்ட பெருமைக்குரிய தருணம்.






## ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

**ரூ.1,00,000/-**
முதல்
**ரூ.1,00,00,000/-**
வரையிலான மதிப்புள்ள சீட்டுகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம்

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும்
உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.

# வினைகள் தீர்க்கும்
# வேல்மாறல்
## மகா மந்திரம்

( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்
தொகுத்தருளியது )




**தினமும் பாராயணம்
செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக**

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில்
  என பல்வேறு தகவல்களுடன்

விலை
ரூபாய்
**46/-**
தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :

**96590 32994**

எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

**தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்**


PM
SWITCH TO THE FUTURE
PALLATHUR MOTORS LLP
PETROL
RIDER LIFE
SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !
PETROL STATION
ELECTRIC
RIDER LIFE
SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!
ELECTRIFY YOUR
JOURNEY NOW
Go far and wide with just
a single charge
LECTRIX
Book Your
TEST DR!VE
Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் தங்கள் நிறுவனம் மற்றும் தங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534

naamnagarathar@outlook.com

# இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- அன்பெனும் அமிர்தமே இனித்திடும் நாளுமே! –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. .................... 14

**பண்பாடு**

- நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள் – முனைவர் நா.வள்ளி சொக்கலிங்கம்.... 21

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA .......... 28

**மொழி**

- வாங்க பேசலாம்..! – பேரா. கு. அன்புமெய்யப்பன் ........................ 29

**கவிச்சோலை**

- உலகத்தின் பார்வை உன் மேலே –கவிச்சுடர் தஞ்சை பழ வள்ளியப்பன்..... 35
- ஆறுபடை வீடழகன்... –அரு.சிவகாமி இராமனாதன், ஒக்கூர்–நவிமும்பை. .... 63

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி............ 36

**சமையல்**

- நெல்லிக்காய் சட்னி ........................................ 39

**படித்ததில் பிடித்தது**

- தயக்கமும், கூச்சமும் தவறான வார்த்தைகள்! ........................ 42

**பங்குசந்தை**


- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்... ........................ 49

**ஜோதிடம்**

- உங்கள் கர்மா என்ன.. வேலையா.. தொழிலா...? –ஜோதிடர் எல்லி ......... 64

**நிதி மேலாண்மை**

- Carbon capture and storage (CCS)/ Carbon Credits. – கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) ............................ 71




GET IT ON Google Play

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 30,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு **30%** முதல் **40%**வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6–வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில் விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.

அலைபேசி எண்ணில் G Pay செய்ய:

**97917 76534**

UPI Pin: senaadigital@okicici

இதழில் விளம்பரம் செய்ய
கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.

**96590 32994**

# அன்பெனும் அமிர்தமே இனித்திடும் நாளுமே!



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தப்பழகுங்கள்! அன்பு ஒன்றே நம்மைக்கண்டு ஆர்ப்பரிக்கும் எதிரியைக் கூட அமைதிப்படுத்தும்.




ஆண்டவன் மீது நாம் செலுத்தும் அன்பின் வாழியாக அந்த ஆண்டவனை நம்மால் காண முடியும் என்கிறார் வள்ளல் பெருமான். அவரது பாடலைப்படியுங்கள்:

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட்படு பரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிரொளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே!" என்று பாடுகிறார்.

நம்மாழ்வாரோ திருமாலிடத்தில் தான் கொண்ட அன்பை இப்படி நமக்குத்தெரிவிக்கிறார்: "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா, – நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்" என்று பாடுகிறார்.



அன்பின் பெருமையைப் பாடும் இன்னுமொரு திரைப்படப் பாடலை நீங்கள் கேட்டு இருக்கக் கூடும். அந்தப்பாடல் இதுதான்:

"அன்பு என்பதே தெய்வமானது!. அன்பு என்பதே இன்பமானது!. மதத்தின் மீது வைத்த அன்பு பக்தி ஆனது!

மனிதன் மீது வைத்த அன்பு பாசமானது! இதயம் மீது வைத்த அன்பு உண்மையானது! ஏழை மீது வைத்த அன்பு கருணையானது!" எனவே அன்பு என்ற பண்பு மனிதர்களிடம் இல்லாமல் போனால் உலகம் இயங்காது.

இராணுவத்தில் பணியாற்றி விட்டு, ஓய்வு பெற்று வந்த ஒரு இராணுவ வீரர், தன்னுடைய மனைவியிடம் அன்பு செலுத்தாமல், தனது அதிகாரத்தைச்செலுத்தினார்.

தன் மனைவியின் செயல்கள் அனைத்தையும் கண்டித்தார். அவள் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டி அவமானப் படுத்தினார். மனைவி தன் கணவனிடம் எதிர்பார்த்த அன்பை அவர் அவள்மீது காட்ட மறுத்தார். தன் கணவரின் செயலைக் கண்டு அதிர்ந்து போன மனைவி,அந்த ஊருக்கு வந்திருந்த ஒரு சாதுவைப் பார்த்து தனது மனக்குறையைச் சொல்லி,தன் கணவரின் மனநிலையை மாற்ற ஏதாவது மருந்து தாருங்கள் என்றாள். அதைக்கேட்ட சாதுவோ, உனது கணவரின் குறையைச்சரி செய்து விடலாம். அதற்கு ஒரு லேகியம் தயார் செய்ய வேண்டும். அந்த லேகியம் தயாரிக்க ஒரு புலியின் முடி ஒன்று தேவைப்படும், அதை நீங்கள் கொண்டு வந்து கொடுத்த பின்பு, நான் லேகியம் தயார் செய்து தருகிறேன் என்றார்.புலியின் முடிக்கு நான் எங்கே போவது? என்று சாதுவைப்பார்த்துக் கேள்வி கேட்டுவிட்டுப் வீட்டிற்குப் புறப்பட்டாள்.

மறுநாள் அவள், மனதை தைரியப்படுத்திக் கொண்டு, கொஞ்சம் சாதம், கறிக்குழம்பு, ஆகியவற்றை எடுத்துக் கொண்டு,காட்டில் புலி வாழும் குகை உள்ள பகுதிக்குச் சென்றாள். புலிக்குகைக்குத் தொலைவில் நின்று கொண்டே புலியை சத்தம் கொடுத்து உணவு சாப்பிட அழைத்தாள். புலி அவளது சத்தம் கேட்டு வெளியே வரவில்லை. நீண்ட நேரம் காத்திருந்து பார்த்துவிட்டு சோகத்தோடு வீடு போய்ச் சேர்ந்தாள்.

மறுநாளும் முயற்சியை கைவிடாமல் சாதம், கறிக்குழம்பு ஆகியவற்றோடு புலியை நாடி குகைக்குச் சென்று, புலியைச் சாப்பிட அழைத்தாள்.மறுநாளும் புலி மௌனம் காத்தது.

மூன்றாவது நாளும் புலியைச் சாப்பிட அழைத்தாள். புலி வெளியே வந்து அவளை ஒரு பார்வை பார்த்து விட்டுச் சென்றது.



அதற்கு அடுத்த நாளும் சென்று புலியைச்சாப்பிட அழைத்தாள். புலி வெளியே வந்து, அவள் அருகில் போய்,அவளது கண்களையே உற்றுக் கவனித்தது. அதன் பின்பு அவள் கொண்டுவந்த உணவைச்சாப்பிட்டது.

இதுபோல அவள் மூன்று மாதங்கள் புலிக்குச் சாப்பிடக் கொடுத்தாள். இப்போது புலி வெளியே வருவதற்குத் தயங்குவதில்லை. அவளைப் பார்த்து உறுமுவதில்லை. அவளும் புலியைப்பார்த்து பயந்து நடுங்குவதுமில்லை.


ஒருநாள் புலியின் தலையை தடவிக் கொடுத்துக்கொண்டே, ஒரு முடியைப்பிடுங்கி விட்டாள்.புலியோ சற்றும் கோபப்படவில்லை. மறுநாள் அந்தப்பெண், மகிழ்ச்சியோடு சாதுவின் ஆசிரமம் சென்று, சாதுவிடம் புலி முடியைக் கொடுத்தாள். அதனை வாங்கிய சாது, அது புலியின் முடிதானா? என்று சோதித்துப்பார்த்து விட்டு, அது புலியின் முடிதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, அந்த முடியைத் தீயில் போட்டுவிட்டார்.

ஏன் இப்படிச் செய்தீர்கள்? என சாதுவைப்பார்த்து படபடப்போடு கேட்டாள். சாதுவோ மிகவும் அமைதியாக அவளைப் பார்த்துக் கேட்டார், இந்த முடியை எவ்வாறு கொண்டு வந்தாய்? என்றதும், அவள் சொன்னாள் மூன்று மாதமாக நான் எடுத்த முயற்சியால் புலியின் அன்பைப்பெற்று,முடியைக் கொண்டு வந்தேன் என்றாள்.

சாது சொன்னார், பெண்ணே நீ அன்பாகப் பேசி, பணிவிடை செய்து கொடிய விலங்கான புலியையே உன் அன்பால் அடக்கி விட்டாய் அல்லவா? அந்தப்புலியை விடக் கொடியவனா உன் கணவன்? அவனையும் நீ முயன்றால் உன் அன்பால், அரவணைப்பால் எளிதாகத்திருத்தி விடலாமே?என்றார்.

சாதுவின் அறிவுரையைக் கேட்ட அந்தப்பெண் வாயடைத்து நின்றாள். அவளுக்கு உண்மை அப்போதுதான் புரிந்தது.

நாம் அன்போடு முன்னெடுக்கும் முயற்சிகள் எப்போதும் வெற்றிபெறும். அன்பு கட்டுப்பாடுகளைத் தகர்த்து விடும். அன்பின் வலிமை அப்போதுதான் புரியும். அனைவரையும் அன்போடு அணுகுவோம்! ஆனந்தம் பெறுவோம்.



நண்பர்களே! உங்களுக்கு நான் ஒன்று சொல்வேன். நாம் ஆண்டவனிடம் காட்டும் அன்பு என்பது பக்தியாகும். பெற்றோரிடமும் பிள்ளைகளிடமும் காட்டும் அன்பு என்பது நேசமாகும். மனைவியிடம் கணவன் காட்டும் அன்பு என்பது காதலாகும். நண்பர்களிடம் காட்டும் அன்பு என்பது நட்பாகும். ஆசிரியர் மற்றும் பெரியவர்களிடம் காட்டும் அன்பு என்பது மரியாதை யாகும். எல்லா உயிர்களிடத்தும் காட்டும் அன்பு என்பது கருணையாகும். மொத்தத்தில் அன்பு என்ற பண்பு அன்பைத் தவிர வேறு எதையும் எதிர் பார்க்காது.

பல்வேறு சமயங்களில் அன்பு அதையும் கூட எதிர் பார்க்காது.அன்பு இல்லாத அறிவு ஞானத்தைத் தராது. மாறாக அழிவைத்தான் தரும். அன்பு இல்லாத அறிவு பண்பைத்தராது, அதுமட்டுமல்ல நல் அடக்கத்தையும் தராது. மொத்தத்தில் அன்பு இன்றேல் அகிலத்தில் எதுவுமே இல்லை! நிறைந்த அன்பை அடுத்தவரிடம் செலுத்துங்கள்!அதன் மூலம் நீங்கள் நிறைந்த அன்பைப்பெற்று நிறை வாழ்வு வாழுங்கள்!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே! அதுவரை இந்தத்தலைப்புக் குறித்து சிந்தியுங்கள்! என்ன சரிதானே!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NCF

**Sign of Commitment**

1983-2026 44TH ANNIVERSARY

Our Culture is Financial Discipline.

Money is Easier when your Proactive Plan with Nithyakalyani Chit Funds...




## OUR BRANCHES

| | |
|---|---|
| Madurai Main<br>98430 93250 | Arasaradi / Mdu<br>73391 25777 |
| Dindigul<br>98432 91652 | Erode<br>75581 99888 |
| AnnaNagar / Mdu<br>98432 91653 | Aruppukkottai<br>73589 91777 |
| Trichy<br>98432 91654 | Thirunagar / Mdu<br>84899 10191 |
| Reserveline / Mdu<br>98430 93256 | Srivilliputhur<br>70944 61192 |
| Coimbatore<br>82200 52338 | Pollachi<br>70923 00882 |

Call : 0452-2692680, 9786300304 / E.Mail : sncfco@gmail.com

# நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள் – 2



# செழுமைக்கு வழிகோலிய பட்டினங்கள்



முனைவர்
நா.வள்ளி சொக்கலிங்கம்
மேனாள் முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கிடையே தொன்றுதொட்டு இருந்துவரும் பழைய கலாச்சாரப் பண்பாடுகள் பழைய தமிழ்ப் பண்பாடுகளாக இருப்பதனாலே அவை மறைந்து போவதற்கு முன்பே, தக்க ஆராய்ச்சிக்காரர்கள் அப்பண்பாடுகளை எல்லாம் ஆராய்ந்து புத்தகமாக எழுதிப் பாதுகாக்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்" என்று சிறந்த தமிழறிஞரும்

மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் குறிப்பிடுவதுபோல, நகரத்தார் வரலாறு குறிப்பிட்ட ஓரெல்லைக்கோ, குறிப்பிட்ட ஓர் இனத்திற்கோ உட்பட்டதன்று. நகரத்தார்கள் இருந்த இடம் சென்ற இடம் எல்லாம் வரலாற்றுத்தடங்கள் உண்டு. மன்னர்கள் காலத்திற்குப் பிறகு சைவ சமயம் கடல்கடந்து பரவியதற்கும், கோயிற்கலைகள் அங்கெல்லாம் நிலைத்திருப்பதற்கும் நகரத்தார்தம் பொதுத்தொண்டு மனமே காரணம். நகரத்தார்கள் காசி முதல் குமரி வரை ஆற்றியிருக்கும் பணிகள் அளப்பரியவை. அவர்களின் சமயப்பணிகள் சமுதாயப் பணிகள், கல்விப்பணிகள், தமிழ்மொழிக்குச் செய்த பணிகள், தமிழக, இந்திய, உலக வரலாற்றில் நிலைத்த இடம் பெறுபவை.

18, 19 ஆம் நூற்றாண்டுகளில் மலேயா சுலதான், தஞ்சை சரபோஜி மன்னர், புதுக்கோட்டை அரசர், இராமநாதபுரம் சேதுபதி ஆகியோருக்குப் பொருளுதவி செய்த சமூகம் நகரத்தார் சமூகம்.

சிறுபான்மைச் சமூகத்தினராகிய நகரத்தார்களுக்கு இது எப்படி சாத்தியமாயிற்று?

'கடல்வாழ்க்கை' என்பது நகரத்தார்களுக்குப் பழக்கமானதொன்று. ஆதியில் நாகநாட்டில் வாழ்ந்தார்கள். அது இலங்கைக்கு அருகிலுள்ள ஒரு தீவு. அதன் ஒரு பகுதி கடல்கோளால் அழிந்தது.

"நாக நன்னாட்டு நானூறு யோசனை
வியன் பாதாளத்து வீழ்ந்து கேடெய்த"

என்று மணிமேகலைக் காப்பியம் ஆழிப்பேரலையால் நாகநாடு அழிந்ததைப் பதிவு செய்கிறது. அதற்கு மனந்தளராது நகரத்தார்கள் காஞ்சிபுரம் வந்தார்கள். அது கடற்கரைப் பட்டினம். அங்கு சில காலம் வாழ்ந்த நகரத்தார்கள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் காவி ரிப்பூம்பட்டினம் வந்தார்கள். அதுவும் கடற்கரைப் பட்டினம் என்பதை நினைவு கொள்ளுதல் வேண்டும்.

கடல் வணிகத்தைக் குலத்தொழிலாகக் கொண்டவர்கள் ஆதலால் திரைகடலோடித் திரவியம் தேட கடற்கரைப் பட்டினத்தில் வசிப்பதே அவர்களுக்கு வசதியாக இருந்திருக்கிறது. பட்டினத்தார் வரலாறு நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று தானே!

கி.பி. 2 ஆம் நூற்றாண்டளவில் காவிரிப்பூம்பட்டினத்தில் சிங்கக் கொடியும் சீரகப்பூ மாலையும் பெற்றுச் சிறப்போடு வாழ்ந்தார்கள். பிறகு சுமார் 1000 ஆண்டுகளுக்குப் பிறகு சோழ அரசனுக்கும் (பூவந்தி சோழன்) அவர்களுக்கும் எற்பட்ட கருத்து வேறுபாடு

(பூவந்தி சோழன்) அவர்களுக்கும் எற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவோ அல்லது நற்குடிகள் தமது நாட்டிற்கு வேண்டுமென்று பாண்டிய மன்னன் (குலசேகர பாண்டியன்) அழைத்த காரணத்தாலோ, நகரத்தார்கள் வெள்ளாற்றங்கரையின் தெற்கே பாண்டிய நாட்டில் பரவலாகக் குடியேறினார்கள்.

பிறகு பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபோது இப்போதுள்ள செட்டிநாட்டுப் பகுதியைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

கடல்வாழ்க்கை என்பது நகரத்தார்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்று. அதனால் பாண்டிய நாட்டில் உப்புவணிகம் போன்ற உள்நாட்டு வணிகம் செய்தவர்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் கடற்பாதுகாப்பும் அந்நியச் செலாவணி முறையும் எளிதாக இருந்ததால், தங்கள் குலமரபுப்படி கடல்கடந்து வணிகம் செய்யத் தொடங்கினார்கள்.

தொண்டி, தூத்துக்குடி, நாகப்பட்டினம், சென்னைப் பட்டினம் வழியாகப் பாய்மரக்கப்பல் மூலமாக இலங்கை, பர்மா, வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேஷியா, மொரீஷியஸ் போன்ற நாடுகளுக்குச் சென்று தொழிலில் ஈடுபட்டனர். முதலில் உப்பு, பஞ்சு, நவதானியங்கள், அரிசி, துணிகள் என்று கொண்டுவிற்றவர்கள் பிறகு கொடுக்கல் வாங்கல் எனப்படும் வட்டித்தொழிலில் ஈடுபட்டனர்.

சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் பர்மா, இலங்கை, மலேயா, ஆகிய கிழக்காசிய நாடுகளோடு நகரத்தார்கள் வணிகத்தொடர்பு கொண்டிருந்த காலம், அவர்களது வாழ்க்கையில் ஒரு பொற்காலம் எனலாம்.

ந்தியாவில் குறிப்பிடத்தக்கதொரு வணிகச் சமூகமாக விளங்கினார்கள். தமிழகத்திலிருந்து கிழக்குக் கடற்கரை யோரமாகவே

பாய்மரக் கப்பல்களில் பயணித்து கல்கத்தா சென்று அங்கிருந்து பர்மாவிற்குச் சென்றார்கள். பர்மாவில் 'மோல்மேன்' என்ற கடற்கரைப் பட்டினத்தில்தான் முதன்முதலில் போயிறங்கினர்.

தங்கள் மூலதனத்தால் பர்மாவை வளப்படுத்தித் தாங்களும் பெரும் பொருள் ஈட்டினர். பர்மாவில் செந்நெல் விளையும் நிலங்கள், எண்ணெய்க் கிணறுகள் ஆகியவை நகரத்தார்களுக்குச் சொந்தமாக இருந்திருக்கின்றன.

பர்மாவின் தலைநகரான இரங்கூனில் நகரத்தார் கடைகள் இருந்த வீதிக்கு நகரத்தார் ரோடு' என்று பெயர். 'பர்மா டாப்பு நொண்டிச்சிந்து' என்ற நூலில் "நகரத்தார் ரோடு பாரு, ரொம்ப ஜோரு" என்று நகரத்தார் ரோட்டைப் பற்றிய குறிப்பு உள்ளது.இலங்கையின் தலைநகரான கொழும்பில் 'செட்டியார் தெரு' என்றே ஒரு தெரு உண்டு. இலங்கையில் நகரத்தார்களுக்குச் சொந்தமாக தேயிலைத் தோட்டங்கள் இருந்தன. அதேபோல மலேயாவில் நகரத்தார்களுக்குச் சொந்தமாக இரப்பர்த் தோட்டங்களும் இருந்தன. மலேயாவில் முதன் முதலில் இரப்பர் பயிரிட்டவர் நச்சாந்துப் பட்டியைச் சேர்ந்த பெ.ராம.குடும்பத்தினர் ஆவர். இச்செய்தி மலேயா செய்தித்தாளில் வெளிவந்துள்ளது.

இவ்வாறு பிற நாடுகளுக்குச் சென்று பொருளீட்டி அந்தந்த நாடுகளையும் வளப்படுத்தித் தாங்களும் பெரும்பொருள் ஈட்டினர். ஈட்டியதில் ஒரு பகுதியைத் தர்மம் செய்வதற்கென எடுத்து வைத்தனர்.

நகரத்தார்களின் ஐந்தொகைக் பேரேட்டில் 'தர்மக்கணக்கு' என்றே ஒரு பகுதி இருக்கும். அப்படி எடுத்து வைத்த பணத்தில், இன்று நாம் நினைத்துக் கூடப்பார்க்கமுடியாத அளவில், கோயிற்பணிகளும் அதையொட்டி நந்தவனங்கள், பசுமடங்கள், வேத ஆகம தேவாரப் பாடசாலைகள், ஊருணிகள், சத்திரங்கள், மடங்கள், விடுதிகள் அமைத்தும், பிறகு காலமாறுதலுக்கு ஏற்ப கல்விப் கல்விப்பணிகள் போன்ற சமுதாயப் பணிகள் செய்தும் வரலாற்றில் நிலைத்த இடம் பெற்றிருக்கிறார்கள்.


தாயகத்தில் தாங்கள் வசித்த ஊர்களில், பெரிய பெரிய மாடமாளிகைகளைக் கட்டிக்கொண்டனர். "திருவாடானைக்கு அருகிலுள்ள தொண்டித் துறைமுகத்திற்கும் பர்மாவுக்கும் இடையே 1930 வரை பாய்மரக் கப்பல்கள் போய்வந்து கொண்டிருந்தன. அரண்மனை போன்ற செட்டிநாட்டு வீடுகள் கட்ட பர்மா தேக்குகள் ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியே கப்பலில் வந்திறங்கின" என்று அறிஞர் சோமலெ 'இராமநாதபுரம் மாவட்டம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பருவக்காற்று வீசுவதற்கு ஏற்ப, பர்மாவிலிருந்து தாங்கள் அனுப்பும் தேக்கு மரங்களில் விலாசமடித்து ஊணாங்கொடியால் சுற்றி ஐராவதி ஆற்றிலிருந்து படகு மூலம் இரங்கூன் போன்ற பர்மிய துறைமுகங்களுக்குக் கொண்டு வந்து, கடலில் பாய்மரக் கப்பல்களில் சங்கிலியால் பிணைத்துவிடுவர், அவைகள் 'தொண்டி' துறைமுகத்துக்கு வந்தபோது யானைகள் மூலம் கரைக்கு இழுத்து இரட்டை மாட்டு வண்டிகளில் ஏற்றி செட்டிநாட்டு ஊர்களுக்குக் கொண்டு வந்தனர். கொண்டு வந்த தேக்கு மரங்களை, கோயில்கள் திருப்பணி செய்வதற்கும் அரண்மனை போன்ற வீடுகள் கட்டுவதற்கும் பயன்படுத்திக் கொண்டனர்.

66 சேராத செல்வத்தைச்
சேர்த்தாலும் நல்லவழிச்
செலவாக்கும் எங்கள் இனமே
திருமகளைக் கலைமகளைக்
கேட்டேனும் உண்மைநிலை
தெரிந்துகொள் தமிழர் நிலமே"

என்று கண்ணதாசனோடு சேர்ந்து நாமும் பெருமைப்படுவோம்.

– பதிவுகள் தொடரும்.

நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram

# Princess Diamonds

## Diamond jewellery for future queens



New Collection

## OUR EXCLUSIVE COLLECTION







**CT ANNAMALAI VIRACHILAI**

9/22, Golden Nagar, Bharathiar University Post, Coimbatore - 641 046

Phone: +91 9092954205

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

## படகுச் சவாரி



பள்ளிக்கூடம் ஆறு தாண்டி
… ஏலே ஏலேலோ
படகில் சென்று பாடம் கற்றோம்
… ஏலே ஏலேலோ
பாட்டுப் பாடி மாலை நேரம்
… ஏலே ஏலேலோ
பத்திரமாய் வீடு சேர்ந்தோம்
… ஏலே ஏலேலோ!

## கூட்டுக் குருவி

கீச் கீச் சத்தம் அந்த
… கூட்டில் கேட்குது
கீழே வந்த குருவி நெல்லை
… கொத்திச் சென்றது
கூட்டுக்குள்ளே குஞ்சுகளும்
… வாய் திறந்தது
கொத்திச்சென்ற நெல்லை ஊட்ட
… சத்தம் நின்றது!



# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி – 21

– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!

## உலக்கை

"ஆத்தா! தெவ்வான, உனக்கு கல்யாணத்துல உரலும் ஒலக்கையும் வச்சாகளா? வச்சிருந்தா மச்சுக்குள்ள கிடக்கும். கருப்பன மேல ஏறி எடுத்துட்டு வரச் சொல்லு " என்பதில் கூறப்படும் உலக்கை என்பது நம் இனத்தாரின் முக்கியமான நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் பொருள்.



" ஆத்தா! தெவ்வான, உனக்கு கல்யாணத்துல உரலும் ஒலக்கையும் வச்சாகளா? வச்சிருந்தா மச்சுக்குள்ள கிடக்கும். கருப்பன மேல ஏறி எடுத்துட்டு வரச் சொல்லு " என்பதில் கூறப்படும் உலக்கை என்பது நம் இனத்தாரின் முக்கியமான நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் பொருள்.

(உல் – உல – உலக்கு – உலக்கை)

**உலுக்கு**

"அப்பச்சி! அந்த மீனா இருக்குற வீதி வழியாமட்டும் போயிராத! அவபாத்துப்புட்டா, அவ்வளவுதான். கேள்வியாலேயே உலுக்கு உலுக்குன்னு உலுக்கிப்புடுவா!" இங்கு கூறப்படும் உலுக்கு என்பது குலுக்குவது என்று பொருள்படும். விடப்பிடியாக தொடர்ந்து கேள்விகேட்டு துயரப்படுத்தும் போதும், ஒருவரைக் கண்டு பயந்த பொழுது, அவரை நேருக்கு நேர் சந்தித்துவிடும் போது அவர் பிடித்துக்கொள்ளும் போதும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. (உலு – உலுக்கு)

**உலை**

"ஆத்தா! வள்ளி மணி 12 ஆச்சு. உலைய வையாத்தா! தம்பி சாப்பாட்டுக்கு வந்துருவான் " என்ற பேரன் மீதான அக்கறையில் அப்பத்தாக்கள் பேசுவர். இங்கு உலை என்பது சோறு சமைப்பதற்காக கொதிக்க வைக்கும் நீரைக் குறிக்கும்.

" அந்த ராசேந்திரன நம்பாத, நம்பாதன்னு சொன்னேனே கேட்டியா? இப்பப்பாரு அவன் இருந்துகிட்டு, உன் வேலைக்கு உலை வச்சிட்டான் பாரு? "இங்கு கூறப்படும் உலை என்பது ஒரு ஒழுங்கைக் கெடுப்பது. அடுக்கிய புத்தகங்களை உலைத்தது யார்?

என்று கேட்கும் போது வரிசைப்படி இருந்த ஒழுங்கை கெடுக்கத்தது யார்? என்ற பொருளைத் தருகிறது. ஆகவே, இங்கு கூறப்படும் உலை என்பது ஒழுங்காக நடைபெற்ற செயலைக் கெடுப்பது அல்லது அழிப்பது என்ற பொருளைத்தரும்.

## உழக்கு

"அப்பத்தா! படப்புக்கு அரிசி இத்தனை உழக்குன்னு போட்டிருக்கே உழக்குன்னா என்ன அப்பத்தா?" என்ற பேத்தியின் சந்தேகத்தில், உழக்கு என்ற சொல்லுக்கு ஆழ்ந்து முகந்தெடுத்தல் என்பது பொருள்.



உழக்கு என்பது படியில் காற்படி அளவைக் குறிக்கிறது. "உழக்கேயுண்டு படைத்தீட்டி" என்று தேவாரத்தில் சுந்தரர் பாடுகிறார். ஒரு உழக்கு அளவே உண்டு, (உழைத்து) செல்வத்தைப் படைத்து, சேர்த்து வைத்திருந்தாலும், அற்பமான விஷயங்களுக்காக அந்த செல்வத்தை இழப்பவர்களும் சில பேர் உள்ளனர் என்பது இவ்வடியின் பொருள்.

## உள்ளதுபோல

"தம்பி! பொண்ணு உள்ளதுபோல இருக்கே பிடிச்சிருக்கா அப்பச்சி?. பொண்ணே கிடைக்கல அப்பத்தா! அதெல்லாம் பரவாயில்ல"என்று அப்பத்தாவும் பேரனும் பேசிக்கொள்வதில் "உள்ளது போல"என்பது ஒரு மிகச் சிறப்பான சொல்லாட்சி. உள்ளது போல என்பதற்கு "இருப்பது போல" என்பது பொருள். அசிங்கம், அவலட்சணம், அழகின்மை என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவைதக் கூட நம்மவர்கள் விரும்பவில்லை.



அதன் மூலம் பிறர் மனம் புண்படுவதையும் அனுமதிக்கவில்லை. நாசூக்காக, அதைச் சொல்வதை என்னவென்று சொல்வது. நம்மவர்களின் உளவியல் அறிந்த பேச்சு வியக்கவைக்கிறது.

## உளுத்துப் போதல்



நம் நகரத்தார்களின் பெருமை வாய்ந்த பழம் பொருள்களெல்லாம் காரைக்குடி முனிஸ்வரன் தெருவில் கிடந்து சீரழிவதைப் பார்க்கும் போது மனம் வருந்துவதைத் தவிர்க்க முடியவில்லை.

### உறக்கம்

"பச்சப்புள்ள எம்புட்டு நேரமா அழுகுது. அதுக்கு ஒறக்கம் (உறக்கம்) வருது பாரு. பாலக்குடுத்துத் தூங்க வையாத்தா! " என்று ஐயாக்கள் பேத்திகளைக் கண்டிப்பதைப் பார்த்திருப்போம்.



உறக்கம் என்ற சொல் இன்றைய பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. உறக்கம் என்பதற்கு தூக்கம் என்பது பொருள்.


### உறங்காப்புளி

"உறங்காப்புளி கருப்பண்ண சாமி! எங்க குலத்துக்கு எப்போதும் போல பக்க துணையா இருந்து காப்பாத்துய்யா!" என்று உறங்காப்புளியானை குலதெய்வமாகக் கொண்ட நகரத்தார்கள் வேண்டுவதைப் பார்த்திருப்போம்.






உறங்காப்புளி என்பது ஒரு சிறு தெய்வம். புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே ராங்கியத்தில் அமைந்துள்ள கோயில், உறங்காப்புளி கருப்பண்ண சாமி கோயிலாகும். ராமபிரான் ராமேஸ்வரத்திலிருந்து அயோத்தி திரும்பும் போது, பலரைக் கொன்றதால் ஏற்பட்ட தோஷங்களும் பின் தொடர்ந்தனவாம்.



அவ் வழியில் ஒரு புளியமரத்தின் அடியில் தங்கிய போது, அந்த மரம் இரவு வேளையிலும் உறங்காமல் (இலைகள் மூடாது) இருந்து அவரைக் பாதுகாத்ததாம். எனவே இம் மரம் உறங்காப் புளி என்றழைக்கப்படுகிறது. இத்தலத்தில் கருப்பசாமி அபூர்வமாக அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார்.

– தொடர்ந்து பேசுவோம்



# உலகத்தின் பார்வை உன் மேலே

வெற்றிகள் பெற்றிட வையகம் போற்றும்
நல்லப் பண்பினை வரவேற்று மகிழும்

உதவிகள் புரிந்திட வியந்தே நோக்கும்
சிகரம் தொட்டிடப் புருவங்கள் உயர்த்தும்

தவறுகள் செய்திடக் கோபத்தைக் காட்டும்
ஒதுக்கி வைத்தே துன்பத்தை அளிக்கும்

குற்றத்தின் தன்மையை எடுத்தே இயம்பும்
தண்டனை அமைந்திட வேண்டுதல் வைக்கும்

உலகத்தின் பார்வை உன் மேலே
உணர்ந்து நடந்திடல் நலம் தானே



கவிச்சுடர்
தஞ்சை பழ வள்ளியப்பன்
மதுரை

பெண் கதவு... ஆண் பூட்டு..! – 21



# இல்லறம்.. அது நல்லறம்

நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

உண்மையான ஆண்மை என்பது ஒரு பெண்ணிற்கு குழந்தை கொடுப்பதில் இல்லை. இறுதிவரை அவளை உண்மையாகப் பார்த்துக் கொள்வதே ஆகும். கணவனுக்கு மனைவி என்பவள் இரண்டாவது தாய். மனைவிக்கு கணவன் என்பவன் முதலாவது குழந்தை.



இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை
என்கிறார் ஔவையார்,

இல்லாள் – இல் + ஆள் இல்லத்திற்கு உரியவள், இல்லத்தின் தலைவி, இல்லத்தை நிர்வாகம் செய்பவள் இல்லத்திற்குரிய நற்பண்கள் உடைய இல்லாள் இல்லாத வீடு, புலி தங்கும் காடு என்கிறார் ஔவையார்.

நற்பண்புகள் இல்லாத இல்லாளோடு வாழ்வது, கொடிய மிருகங்கள் உள்ள காட்டில் பெரும் சிறப்புடையவர்களாக இருப்பினும் வாழ்வது எவ்வளவு கடினமோ, அவ்வளவு கடினமாகும்.

அதே வேளையில் குடும்பத் தலைவன் எனப்படும் கணவனானவன் இல்லாள் சரியாக அமையாவிட்டால் 'இல்லான்' ஆகிறான்.

'இல்லான்' என்றால் வறியவன். செல்வம் பணம், காசு ஏதும் இல்லாதவன், 'இல்லாள்' என்ற உயர்ந்த சொல்லுக்கு எதிர்ச் சொல்லாக 'இல்லான்" எனக் கூறுவர். அது மிகப்பெரிய பொருள் குற்றமாகிவிடும். இருப்பினும் பெரும்பாலான கணவர்கள் அன்பு, பண்பு, பாசம் இல்லாதவர்களாக இருப்பது கண்கூடு 'இல்லாள்' என்பதற்கு எதிர்ச் சொல் 'இல்லாளன்' என்பதே சரி.
இல்லானை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாயும் விரும்பாள்.
( நல்வழி – ஔவை )

பொருள் இல்லாதவனைத் தாயும், மனைவியும் விரும்பார், ஆகவே கல்லாத கணவனும் பொருள் ஈட்டுவதில் வல்லவனாக இருந்தால் அவனை எல்லோரும் மதிப்பர், ஆகவே இல்லான் என்ற நிலையை மாற்றி இல்லாளன் என்ற உயர்நிலையை அடைய ஒவ்வொரு ஆடவனும் முயல வேண்டும். இல்லாளன் தன் இல்லாளைப் பேணினால் தான் உலகம் போற்றும்.. மதிக்கும்.


இல்லாளின் பணிகளை பணத்தால் மதிப்பீடு செய்ய முடியாது, அதை அவர்கள் விரும்புவதும் இல்லை. சலவைத் தொழிலாளியாக, சமையல் கலைஞராக, துப்புரவு, தொழிலாளியாக, பிள்ளைகளுக்கு பாடம் போதிக்கும் ஆசிரியராக, உடல்நலம் பேணும்



மருத்துவராக, தோட்டக்கலை வல்லுநராக என இல்லறம் செழிக்கப்பாடுபடும் இல்லாளின் சேவைக்கு கோடிப்பொன் கொடுத்தாலும் ஈடாகாது.

ஓர் இல்லாளின் எதிர்பார்ப்பு, தன் கணவன் பிள்ளைகளிடமிருந்து ஓர் அன்பான புன்னகை, அதைக் கூட வழங்க இயலாத இயந்திர வாழ்க்கையை இன்று பெரும்பாலான குடும்பங்களில் காண இயல்கிறது. இல்லம் இனிமை உற இல்லாள் அகத்தை மகிழ்வோடு வைத்திருக்க வேண்டும். இது ஒவ்வொரு இல்லாளனின் கடமை. இனிய இல்லம் அமைய இருவரும் எதிர்வினை ஆற்றாமல் உடன்பட்டு செயல்புரிதல் வேண்டும்.

–தொடரும்.

நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play


காரியத்தில் முக்கியத்துவத்தை விட
காரியம் செய்யும் காலத்தின் முக்கியத்துவமே
பிரதானம். – கண்ணதாசன்




# நெல்லிக்காய் சட்னி



காலையில் உங்கள் வீட்டில் பெரும்பாலும் இட்லி, தோசை தான் காலை டிபனாக இருக்குமா? அந்த இட்லி, தோசைக்கு எப்போதும் சட்னியை தான் செய்வீர்களா? அப்படியே சட்னி செய்வதாக இருந்தாலும், ஒரே மாதிரியான சட்னியைத் தான் அடிக்கடி செய்வீர்களா? உங்கள் வீட்டில் நெல்லிக்காய் உள்ளதா? அப்படியானால் அந்த நெல்லிக்காய் கொண்டு சட்னி செய்யுங்கள்.

இந்த நெல்லிக்காய் சட்னி இட்லி, தோசையுடன் சேர்த்து சாப்பிட அட்டகாசமாக இருக்கும். மேலும் இது ருசியானது மட்டுமின்றி, சத்தானதும் கூட. நெல்லிக்காயில் வைட்டமின் சி மற்றும் சக்தி வாய்ந்த ஆன்டி–ஆக்ஸிடன்ட்டுகள் உள்ளன. எனவே மழை நேரத்தில் இந்த நெல்லிக்காயை சட்னியை செய்து சாப்பிட்டால், நோயெதிர்ப்பு சக்தி வலிமையடைந்து, அடிக்கடி நோய்வாய்ப் படுவதைத் தவிர்க்கலாம்.

உங்களுக்கு நெல்லிக்காய் சட்னியை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? ஆச்சீஸ் கிச்சன் இந்த மாதம் பகுதியில் நெல்லிக்காய் சட்னி ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

### தேவையான பொருட்கள்:



- துருவிய தேங்காய் – 1/2 கப்
- பச்சை மிளகாய் – 4
- கறிவேப்பிலை – 1 கொத்து
- கொத்தமல்லி – 1 கையளவு
- பூண்டு – 4 பல்
- நெல்லிக்காய் – 3
- உப்பு – சுவைக்கேற்ப
- புளி – சிறிய துண்டு
- தண்ணீர் – தேவையான அளவு

### தாளிப்பதற்கு...

- எண்ணெய் – 2 டீஸ்பூன்
- கடுகு – 1 டீஸ்பூன்
- கறிவேப்பிலை – 1 கொத்து
- வரமிளகாய் – 1
- பெருங்காயத் தூள் – 1/4 டீஸ்பூன்

### செய்முறை:

- முதலில் மிக்சர் ஜாரில் துருவிய தேங்காயை எடுத்துக் கொள்ள வேண்டும்.

- பின் அதில் பச்சை மிளகாய், கறிவேப்பிலை, 1 கையளவு கொத்தமல்லி, 4 பல் பூண்டு ஆகியவற்றை சேர்க்க வேண்டும்.
- அதன் பின் அதில் 3 நெல்லிக்காயை துண்டுகளாக்கி சேர்த்து, சுவைக்கேற்ப உப்பு சேர்க்க வேண்டும்.
- பின்பு சிறு துண்டு புளியை சேர்த்து, சிறிது நீரை ஊற்றி நன்கு மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும்.
- பிறகு ஒரு கிண்ணத்தில் அரைத்த சட்னியை எடுத்துக் கொண்டு, சிறிது நீரை ஊற்றி மிகவும் கெட்டியாக இல்லாதவாறு கலந்து கொள்ள வேண்டும்.
- இறுதியாக ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் தாளிப்பதற்கு 2 ஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடானதும், கடுகு, கறிவேப்பிலை, வரமிளகாய் மற்றும் பெருங்காயத் தூள் சேர்த்து தாளித்து, சட்னியுடன் சேர்த்து கலந்தால், சுவையான நெல்லிக்காய் சட்னி தயார்.

ஒருடைம் இப்படி சட்னி செய்யுங்க.. இட்லி, தோசைக்கு அல்டிமேட்டா இருக்கும். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

கட்டுரையாக்கம்:
உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.






இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

# தயக்கமும், கூச்சமும் தவறான வார்த்தைகள்!



சென்னையில் இருந்து மதுரைக்குக் கிளம்பிய ஒருவன், எதிரில் ஒரு பெரியவரைச் சந்தித்து வழி கேட்டான். அவர் சிரித்துக் கொண்டே வாயைக் காண்பித்து, "மதுரைக்கு வழி வாயில" என்றார்.



அதாவது, 'என்னிடம் வாய் திறந்து கேட்ட மாதிரி, பிறரிடமும் கேட்டு வழியைத் தெரிந்துகொள்' என்பதுதான் இதன் அர்த்தம்.

ஆம்! 450 கி.மீ.க்கும் ஒருவர் வழி சொல்வதென்பது சாத்திய மற்றதுதான். அதையும் மீறி இலக்கை அடைய வேண்டுமானால், நீங்கள் வாய் திறந்து கேட்க வேண்டும். அப்படியானால், தயக்கம், கூச்சம், வெட்கம், அவமானம் இவை நான்கும் வெற்றியாளர்களுக்கு இருக்கவே கூடாது.

'அழுகிற பிள்ளைக்குத்தான் பால்' என்பது பழமொழி. அதுபோல, வாய்விட்டுப் பேசினால்தான், நமக்கு என்ன தேவை என்பது பிறருக்குப் புரியும்; அல்லது நம்மால் என்ன முடியும் என்பது அடுத்தவருக்குத் தெரியும்.

சிலர், 'நான் பிறரோடு பேசக் கூச்சப்படுபவன்' என்ற ரகமாக இருப்பார்கள். அதற்கு என்ன காரணம் தெரியுமா?



'நாம் நம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறபோது, எதிராளி முகத்தைத் திருப்பிக் கொண்டால் என்ன ஆகும்?'

'அவர் பதில் சொல்லவில்லை என்றால், நமக்கு என்னவோ போன்று இருக்குமே?'

'அவர் முகம் கொடுத்துப் பேசவில்லையென்றால், நமக்கு 'சப்' என்று ஆகிவிடுமே?

'எதையோ எதிர்பார்த்து பேசுவதாக அவர் நினைத்தால் நம் மதிப்பு என்ன ஆவது?'

இப்படிப்பட்ட தயக்கங்கள் அவர்களது மனதில் ஓடுவதால்தான், அவர்கள் தெரியாத மனிதர்களிடம் வலியச் சென்று அறிமுகப்படுத்திக் கொள்வதில்லை.

ஆனால், நீங்கள் சாதிக்கப் பிறந்தவராக இருந்தால், ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்.நம் கலாச்சாரப்படி, புதிய மனிதரிடம் யாரும் எடுத்தெறிந்து பேசுவதில்லை; கோபப்படுவதில்லை; சண்டை போடுவதில்லை. எனவே, தைரியமாக உங்களை நீங்கள் அறிமுகப்படுத்திக் கொள்ளலாம். இவற்றையும் மீறி, ஒருவேளை அவர் உங்களை மதிக்கவில்லை என்றால், அது அவருக்கு வேறு ஏதோ பிரச்சனை இருப்பதைத்தான் காட்டுகிறது. அதைப் பற்றி அவர்தான் கவலைப்பட வேண்டும். நீங்கள் அல்ல....



உங்கள் கூச்ச சுபாவத்தைப் போக்க, ஒரு எளிய பயிற்சி! நாள்தோறும் நீங்கள் இரண்டே இரண்டு புதிய மனிதர்களைச் சந்தித்து உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு உங்கள் விசிட்டிங் கார்டை மாற்றிக் கொள்ளுங்கள்.

இப்படி உங்கள் விசிட்டிங் கார்டுகளை எத்தனை பேரிடம் பகிர்ந்து கொள்கிறீர்களோ அந்த அளவிற்கு நீங்களும், உங்கள் நிறுவனமும் பரிச்சயமாவீர்கள்.

மறந்துவிடாதீர்கள், விசிட்டிங் கார்டில் உங்கள் போட்டோவும் இடம் பெறட்டும். அப்போதுதான் உங்கள் முகம் அவர்களது நினைவில் இருக்கும்.

சரி... அறிமுகப்படுத்திக் கொண்டால் மட்டும் போதுமா?

இல்லை!

அந்தத் தொடர்பு உங்களுடைய இலக்கை அடைய உதவுமானால், ஃபேஸ்புக், டுவிட்டர், வாட்ஸ்அப் என அவரோடு தொடர்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.



சிலர் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும்போது அடக்கியே வாசிப்பார்கள். அப்படி செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. நீங்கள் உங்களைப் பற்றி உயர்வாகச் சொல்லத் தேவையில்லை என்றாலும்கூட, உள்ளதைச் சற்று அழகாகச் சொல்லலாம்.

'நான் இந்தத் துறையில் 17 ஆண்டுகள் அனுபவம் பெற்றவன்'; 'என் நிறுவனத்தில் 60 பேர் பணியாற்றுகிறார்கள்'; '32 வாடிக்கையாளர்கள் எங்களுக்கு உள்ளனர்' என உங்களைப் பற்றி நீங்களே பெருமிதமாக எண்ணக்கூடிய சில விஷயங்களைச் சொல்லி உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்.

தயக்கம், கூச்சம், வெட்கம், அவமானம் இவை நான்குமே நீங்களே உங்களுக்கு உருவாக்கிக் கொள்கிற தடைக்கற்கள். எந்த எதிரியும் வெளியிலிருந்து இதை உங்களுக்குள் ஏற்படுத்த முடியாது.

இவற்றை நெகட்டிவாகப் பார்க்காமல், பாசிட்டிவாகப் பார்க்கப் பழகிக் கொள்ளுங்கள். நீங்கள் கோடீஸ்வரராக வேண்டுமானால் நூறு கதவுகளையாவது தட்ட வேண்டும்; ஆயிரம் மனிதர்களையாவது பார்க்க வேண்டும். எனவே இந்த நான்கு விஷயங்களைத் தவிர்த்தால்தான் முன்னேற முடியும்.

"சார் தயக்கமே பார்க்கமாட்டார் தெரியுமா?"

"அவர் கூச்சப்படாத டைப்"

"சார் அவமானத்துக்கெல்லாம் அஞ்ச மாட்டார்"

என இந்த உலகம் இவற்றையெல்லாம் பாசிட்டிவாகத்தான் பார்க்கிறது. ஏன் நீங்கள் மட்டும் இதனை நெகட்டிவாக எடுத்துக் கொள்ள வேண்டும்?

நீங்கள் தற்போது செய்யவேண்டியது என்னவென்றால், இதுவரை எதிர்கொண்ட மிகப் பெரிய அவமானங்களைப் பட்டியலிடுங்கள், அவற்றையெல்லாம் பாசிட்டிவாகப் பார்க்க முடியுமா என்று சிந்தயுங்கள். அப்படி சிந்திக்க முடியுமானால், நீங்கள் வெற்றிக்கு அருகில் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram



# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.**

**Webinar Dates** — Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This Month Class will be On February 27th, 2026

**Webinar Timings** — India Time: in 17:30Hrs-18.30Hrs / 21.00- 22.00Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs / 20.00-21.00Hrs Week Ends.

**# For further Details Contact:** +91-9790755337   +91-9884072224

nagarathar.capital@gmail.com

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு நிறுவனம் குறித்த பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

## விண்ட்லாஸ் பயோடெக் லிமிடெட்

windlas

Windlas Biotech Limited

## நிறுவனத்தை பற்றி:-

விண்ட்லாஸ் பயோடெக் லிமிடெட் என்பது 2000 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு முன்னணி இந்திய மருந்து நிறுவனமாகும், இது உத்தரகண்ட் மாநிலம் டேராடூனை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. இந்த நிறுவனம் உயர்தர மருந்து சூத்திரங்களை தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றது, புதுமை, இணக்கம் மற்றும் நோயாளியை மையமாகக் கொண்ட தீர்வுகளை மையமாகக் கொண்டு உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு சேவை செய்கிறது.

விண்ட்லாஸ் பயோடெக் லிமிடெட் இந்தியாவின் ஜெனரிக் ஃபார்முலேஷன்ஸ் ஒப்பந்த மேம்பாடு மற்றும் உற்பத்தி அமைப்பு (CDMO) துறையில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது, உயர்தர, செலவு குறைந்த மருந்து தீர்வுகளை வழங்குவதில் உறுதியாக உள்ளது. இந்த நிறுவனம் அதன் ஜெனரிக் ஃபார்முலேஷன்ஸ் CDMO மூலம் ஃபார்முலேஷன் மேம்பாடு மற்றும் வணிக உற்பத்தி சேவைகளை வழங்க, முன்னணி மருந்து பிராண்டுகளுடன் கூட்டு சேர்ந்து, பல்வேறு சுகாதார நிறுவனங்களும் அணுகக் கூடிய, மலிவு மற்றும் உண்மையான மருந்துகளை வழங்குகிறது, மற்றும் ஏற்றுமதி வெர்டிகல் மூலம் வளர்ந்து வரும் சந்தைகளில் ஒழுங்குபடுத்தப்பட்டு விரிவடைகிறது.

இந்த நிறுவனம் உத்தரகண்ட் மாநிலம் டேராடூனில் WHO GMP இணக்கமான ஐந்து உற்பத்தி ஆலைகளை இயக்குகிறது. ஃபைசர், சனோஃபி இந்தியா, காடிலா ஹெல்த்கேர், எம்க்யூர் பார்மாசூட்டிகல்ஸ், எரிஸ் லைஃப் சயின்சஸ், இன்டாஸ் பார்மாசூட்டிகல்ஸ், சிஸ்டோபிக் லேபரேட்டரீஸ் பிரைவேட்

லிமிடெட் போன்ற நிறுவனங்கள் உட்பட 10 இந்திய ஃபார்முலேஷன் மருந்து நிறுவனங்களில் 7 நிறுவனங்களுக்கு CDMO சேவைகளை வழங்குகிறது. இதன் உற்பத்தி திறன் ஆண்டுக்கு 8,522 மில்லியன் மாத்திரைகள் மற்றும் காப்ஸ்யூல்கள், ஆண்டுக்கு 54 மில்லியன் பை மற்றும் சாச்செட் பேக்குகள் மற்றும் ஆண்டுக்கு 61 மில்லியன் திரவ பாட்டில்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

நாள்பட்ட மற்றும் துணை–நாள்பட்ட சிகிச்சை பிரிவுகளில் கவனம் செலுத்தி, விண்ட்லாஸ் கிராமப்புற மற்றும் சிறு நகர்ப்புற சந்தைகளில் அணுகல் மற்றும் மலிவு விலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சிக்கலான ஜெனரிக்ஸின் பல்வேறு தொகுப்புகளை வழங்குகிறது. நிறுவனம் ஃபார்முலேஷன், வாய்வழி திட மருந்தளவு வடிவம், திரவ மருந்தளவு வடிவம் மற்றும் ஊசி மருந்துகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது. வருவாய் அடிப்படையில், இந்தியாவில் உள்நாட்டு மருந்து ஃபார்முலேஷன்ஸ் CDMO துறையில் முதல் ஐந்து நிறுவனங்களில் இந்த நிறுவனம் ஒன்றாகும்.

ஒப்பந்த மேம்பாடு & உற்பத்தி (C D M O ), பொதுவான ஃபார்முலேஷன்ஸ், OTC/வர்த்தக பொதுவான பொருட்கள் மற்றும் ஏற்றுமதி சந்தைகள் என பல பிரிவுகளைக் கொண்ட அதன் பல–பிரிவு வணிக மாதிரியிலிருந்து விண்ட்லாஸ் பயோடெக் லிமிடெட் குறிப்பிடத்தக்க அளவில் பயனடைகிறது. இந்தப் பிரிவுகள் அனைத்திலும் பங்கேற்பதன் மூலம், நிறுவனம் வருவாய்க்கான எந்தவொரு ஒற்றை மூலத்தையோ அல்லது சந்தை சுழற்சியையோ அதிகமாகச் சார்ந்திருக்கவில்லை.

CDMO பிரிவு, ஃபார்முலேஷன் மேம்பாடு மற்றும் உற்பத்தியை அவுட்சோர்ஸ் செய்யும் பெரிய மருந்து வாடிக்கையாளர்களிடமிருந்து நிலையான நீண்டகால தேவையை வழங்குகிறது. அதே நேரத்தில், நிறுவனத்தின் சொந்த பொதுவான பொருட்கள் மற்றும் O T C தயாரிப்புகள் உள்நாட்டில் கூடுதல் அளவு மற்றும் பிராண்ட் தலைமையிலான வளர்ச்சியை உருவாக்குகின்றன. ஏற்றுமதிகள் மற்றொரு பரிமாணத்தைச் சேர்க்கின்றன, விளிம்பு திறனை மேம்படுத்துகின்றன மற்றும் புவியியல் செறிவு அபாயத்தைக் குறைக்கின்றன. இந்த பன்முகப்படுத்தப்பட்ட வருவாய் கலவை மீள்தன்மை, மென்மையான வருவாய் தெரிவுநிலை மற்றும் வலுவான நீண்டகால வளர்ச்சி திறனை உறுதி செய்கிறது.

விண்ட்லாஸ் பயோடெக்கின் வலுவான போட்டி நன்மைகளில் ஒன்று அதன் மேம்பட்ட உற்பத்தி உள்கட்டமைப்பு மற்றும் வலுவான இணக்கப் பதிவு ஆகும். நிறுவனம் பல அதிநவீன உற்பத்தி வசதிகளை இயக்குகிறது, இதில் புதிதாக நியமிக்கப்பட்ட ஸ்டெரைல் ஊசி மருந்து ஆலை அடங்கும், இது அதிக மதிப்புள்ள மற்றும் மிகவும் சிக்கலான ஃபார்முலேஷன்களை பூர்த்தி செய்யும் திறனை விரிவுபடுத்துகிறது. அனைத்து வசதிகளும் நல்ல உற்பத்தி நடைமுறைகள் (G M P ) மற்றும் அட்டவணை–M போன்ற கடுமையான ஒழுங்குமுறை விதிமுறைகளுக்கு இணங்குகின்றன, இது நிலையான தயாரிப்பு தரம் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் பகுதி–ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகளை வழங்குவதற்கான தகுதியை உறுதி செய்கிறது.

புதிய வழிகளில் மூலதனச் செலவுகளை, ஏற்கனவே உள்ள ஆலைகளுக்கான மேம்பாடுகள் மற்றும் ஊசி மருந்து வசதியை இயக்குதல் ஆகியவை உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் எதிர்கால தேவையைப் பெறுவதற்கான ஒரு முன்னெச்சரிக்கை அணுகுமுறையை எடுத்துக்காட்டுகின்றன. சுகாதார நுகர்வு அதிகரித்து, அதிகமான மருந்து நிறுவனங்கள் ஃபார்முலேஷன்கள் உற்பத்தியை அவுட்சோர்ஸ் செய்யும்போது, விண்ட்லாஸ் இந்த கட்டமைப்பு ரீதியான பின்னடைவுகளை சவாரி செய்ய நல்ல நிலையில் உள்ளது. சிக்கலான ஜெனரிக்ஸ், ஆரோக்கிய தயாரிப்புகள் மற்றும் நிறுவன விநியோகப் பிரிவுகளில் நிறுவனத்தின் கவனம் அதன் நடுத்தர முதல் நீண்ட கால வளர்ச்சி வாய்ப்புகளை மேலும் வலுப்படுத்துகிறது.

விண்ட்லாஸ் இருதய நோய், நீரிழிவு நோய், சுவாசம், இரைப்பை குடல், மத்திய நரம்பு மண்டல நரம்பியல், தோல் மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து மருந்துகள் உள்ளிட்ட பல முக்கிய சிகிச்சைப் பகுதிகளில் செயல்படுகிறது. இந்த பல சிகிச்சை இருப்பு நிறுவனம் ஒரு சிகிச்சைப் பிரிவை அதிகமாகச் சார்ந்து இல்லை என்பதை உறுதி செய்கிறது, இது வணிக செறிவு அபாயத்தைக் குறைக்கிறது.

**நிறுவனத்தின் முக்கிய வணிகப் பகுதிகள்:**

– ஒப்பந்த மேம்பாடு மற்றும் உற்பத்தி அமைப்பு (CDMO) சேவைகள்
– ஜெனரிக் ஃபார்முலேஷன்கள்
– ஜெனரிக்ஸ் & நிறுவன வர்த்தகங்கள்
– ஏற்றுமதி
– மாத்திரைகள், காப்ஸ்யூல்கள், சிரப்கள் மற்றும் ஊசி மருந்துகள் உள்ளிட்ட மருந்து உற்பத்தி

**நிறுவனத்தின் தயாரிப்புகள் மற்றும் சேவைகள்:**

– திட மற்றும் திரவ மருந்து அளவு வடிவங்கள்

– நிலையான அளவு சேர்க்கைகள் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட வெளியீட்டு சேர்க்கைகள் உள்ளிட்ட சிக்கலான ஜெனரிக் மருந்துகள்

– ஜெனரிக் மருந்துகள் மற்றும் ஓடிசி சந்தைகளில் பிராண்டட் தயாரிப்புகள்

– பல நாடுகளுக்கு ஜெனரிக் பொருட்களின் ஏற்றுமதி

**நிறுவனத்தின் அடிப்படைக் கண்ணோட்டம்:–**

நிறுவனத்தின் ஒருங்கிணைந்த EPS 31.67 (2025–09 அன்று முடிவடையும் பன்னிரண்டு மாதங்கள் பின்தொடர்கிற நிலையில்), ஒருங்கிணைந்த PE விகிதம் 36.01 தொழில்துறை PE உடன் ஒப்பிடும்போது 25.42. முக மதிப்பு 5 ஆகும்.நிறுவனத்தின் ஒருங்கிணைந்த EPS 31.67 (2025–09 அன்று முடிவடையும் பன்னிரண்டு மாதங்கள் பின்தொடர்கிற நிலையில்), ஒருங்கிணைந்த PE விகிதம் 36.01 தொழில்துறை PE உடன் ஒப்பிடும்போது 25.42. முக மதிப்பு 5 ஆகும்.

நிறுவனம் கிட்டத்தட்ட கடன் இல்லாத நிலையில் உள்ளது.
நிறுவனம் 19.7% ஆரோக்கியமான ஈவுத்தொகையை வழங்கி வருகிறது.

சமீபத்திய தரவுகளின்படி,
பிரமோட்டர்கள் 61.99% பங்குகளை வைத்திருக்கிறார்கள்.
ஐசிஐசிஐ புருடென்ஷியல் பார்மா ஹெல்த்கேர் & டயக்னாஸ்டிக்ஸ் ஃபண்ட் 5.38% பங்குகளை வைத்திருக்கிறது.


பிஜிஐஎம் இந்தியா ஈக்விட்டி க்ரோத் ஆப்பர்ச்சுனிட்டிஸ் ஃபண்ட் சீரிஸ்–1 1.02% பங்குகளை வைத்திருக்கிறது.

## நிறுவன முக்கிய அளவீடுகள்:–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அதிகமான | 812.60 | டிஜவி பலன்(%) | - | தோராய மதிப்பு | 5.00 |
| குறைவான | 782.55 | VWAP(R) | 797.59 | Beta | - |
| வால்யூம் | 39088 | மார்க்கெட்ஸ் கேப் | 1696.51 | இபிஎஸ் | 31.67 |
| திறந்த விலை | 797.80 | பி/இ விகிதம் | 25.42 | 52வாரம் - குறைவு | 665.10 |
| முந்தைய முடிவு | 797.80 | பி/பி விகிதம் | 4.31 | 52வாரம் - அதிகம் | 1140.00 |

## நிறுவன நிதிநிலை செயல்பாடு:–

## வருமானம் (லாபம் & நஷ்டம்):





தயாரிப்புகள்

| காலண்டு | Dec 2025 | Sep 2025 | Jun 2025 | Mar 2025 | Dec 2024 |
|---|---|---|---|---|---|
| Total Income | 237.67 | 226.04 | 215.33 | 207.64 | 199.13 |
| Total Income Growth (%) | ↑ 5.14 | ↑ 4.98 | ↑ 3.70 | ↑ 4.28 | ↑ 3.80 |
| Total Expenses | 216.42 | 201.44 | 191.01 | 185.49 | 177.33 |
| Total Expenses Growth (%) | ↑ 7.44 | ↑ 5.46 | ↑ 2.98 | ↑ 4.60 | ↑ 4.03 |
| EBIT | 21.25 | 24.60 | 24.32 | 22.15 | 21.80 |
| EBIT Growth (%) | ↓ -13.64 | ↑ 1.19 | ↑ 9.77 | ↑ 1.61 | ↑ 1.91 |
| Profit after Tax (PAT) | 15.00 | 17.80 | 17.66 | 16.28 | 15.58 |
| PAT Growth (%) | ↓ -15.72 | ↑ 0.77 | ↑ 8.49 | ↑ 4.53 | ↓ -0.52 |
| EBIT Margin (%) | 8.94 | 10.88 | 11.29 | 10.67 | 10.95 |
| நிகர லாப அளவு (%) | 6.31 | 7.87 | 8.20 | 7.84 | 7.82 |
| Basic EPS (₹) | 7.12 | 8.48 | 8.43 | 7.77 | 7.45 |

## பணியாளர் மற்றும் வட்டி செலவு


மார்ச் 31, 2025 உடன் முடிவடைந்த ஆண்டில், நிறுவனம் அதன் இயக்க வருவாயில் 1% க்கும் குறைவாகவே வட்டி செலவுகளுக்காகவும், 6.94% ஊழியர் செலவுக்காகவும் செலவிட்டுள்ளது.

## இருப்பு தாள்:



| Annual | Mar 2025 | Mar 2024 | Mar 2023 | Mar 2022 | Mar 2021 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 760.45 | 626.21 | 528.98 | 491.01 | 296.12 |
| Total Assets Growth (%) | ↑ 21.44 | ↑ 18.38 | ↑ 7.73 | ↑ 65.81 | ↓ -12.52 |
| Total Liabilities | 254.68 | 176.27 | 126.70 | 96.23 | 97.00 |
| Total Liabilities Growth (%) | ↑ 44.48 | ↑ 39.12 | ↑ 31.66 | ↓ -0.79 | ↓ -24.70 |
| Total Equity | 505.77 | 449.94 | 402.27 | 394.78 | 199.12 |
| Total Equity Growth (%) | ↑ 12.41 | ↑ 11.85 | ↑ 1.90 | ↑ 98.26 | ↓ -5.03 |
| தற்போதைய விகிதம் (x) | 2.11 | 2.51 | 2.92 | 4.02 | 2.08 |
| Total Debt to Equity (x) | 0.05 | 0.00 | 0.00 | 0.02 | 0.15 |
| Contingent Liabilities | 2.08 | 15.29 | 14.11 | 3.25 | NA |

## பணப்புழக்கம்:





| Annual | Mar 2025 | Mar 2024 | Mar 2023 | Mar 2022 | Mar 2021 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 68.19 | 108.96 | 60.97 | 9.13 | 11.45 |
| Net Cash used in Investing Activities | -74.06 | -92.07 | -14.11 | -154.58 | -20.20 |
| Net Cash flow from Financing Activities | 1.01 | -15.29 | -43.74 | 130.09 | 0.78 |
| Net Cash Flow | -4.86 | 1.60 | 3.12 | -15.36 | -2.15 |
| Closing Cash & Cash Equivalent | 0.42 | 5.29 | 3.69 | 0.57 | 15.93 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↓ -91.98 | ↑ 43.46 | ↑ 546.67 | ↓ -96.42 | ↓ -11.88 |
| Total Debt/ CFO (x) | 0.40 | 0.00 | 0.01 | 0.67 | 2.64 |

## முதலீட்டிலிருந்து வரும் பணத்தில் குறைவு

நிறுவனம் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு ரூ.74.06 கோடியைப் பயன்படுத்தியுள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 19.56% குறைவு. (மூலம்: ஒருங்கிணைந்த நிதி)

## முதலீட்டிலிருந்து வரும் பணத்தில் குறைவு




| Annual | Mar 2025 | Mar 2024 | Mar 2023 | Mar 2022 | Mar 2021 |
|---|---|---|---|---|---|
| ஈக்யுவிட்டியில் லாபம் (%) | 11.95 | 12.87 | 10.59 | 9.64 | 7.95 |
| பயன்படுத்திய மூலதனத்தில் லாபம் (%) | 16.46 | 17.20 | 14.18 | 11.83 | 22.11 |
| சொத்துக்களில் லாபம் (%) | 7.94 | 9.25 | 8.05 | 7.75 | 5.34 |
| Interest Coverage Ratio (x) | 25.59 | 82.93 | 89.07 | 41.73 | 34.74 |
| Asset Turnover Ratio (x) | 1.10 | 1.09 | 1.01 | 1.18 | 144.40 |
| Price to Earnings (x) | 36.23 | 18.42 | 11.06 | 12.03 | NA |
| Price to Book (x) | 4.31 | 2.37 | 1.17 | 1.16 | NA |
| EV/EBITDA (x) | 19.56 | 11.29 | 6.36 | 5.92 | NA |
| EBITDA Margin (%) | 14.75 | 14.52 | 13.68 | 12.69 | 13.51 |

| ஸ்டாக் செயல்திறன் | நிதிநிலை செயல்பாடு |
|---|---|

| கம்பெனி | எல்டிபி | மார்கெட் கேப் | பிரைஸ் டு புக் | பிரைஸ் டு இயர்னிங் | பிஏடி மார்ஜின் | RoE% | RoA% | ஈக்விட்டி கடன் | தற்போதைய விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விண்ட்லாஸ் பயோடெக் லிமிடெட் | 804.90 | 1696.51 | 4.31 | 25.42 | 8.02 | 16.46 | 7.94 | 0.05 | 2.11 |

## விளக்கப்படம் தொழில்நுட்பங்கள்:–




## சக நிறுவன ஒப்பீடு:–

### Insecticide Ind Peer Comparison

Insecticide Ind Stock Performance | Ratio Performance | SEE ALL PARAMETERS

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| Insecticide Ind | 21.11 | 2.76 | 13.09 | 7.48 | 9.89 | 9.95 |
| Rallis India | 42.98 | 4.36 | 9.67 | 5.74 | 0.79 | 8.72 |
| NACL Industries | -101.22 | 13.81 | -21.57 | -7.29 | -9.00 | -6.79 |
| Bharat Rasayan | 32.41 | 4.04 | 12.47 | 10.00 | -3.04 | 14.82 |
| Bhagiradha Chem | 285.73 | 5.80 | 2.03 | 1.48 | 0.99 | 7.34 |

Add More

Windlas Biotech Stock Performance | Ratio Performance | SEE ALL PARAMETERS

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| Windlas Biotech | 25.42 | 3.35 | 11.95 | 7.94 | 17.87 | 11.07 |
| Zydus Wellness | 62.57 | 2.28 | 6.11 | 5.38 | 10.36 | 13.47 |
| Lupin | 21.63 | 5.81 | 19.07 | 11.23 | 11.32 | 18.97 |
| Cipla | 23.66 | 3.44 | 16.90 | 14.10 | 8.73 | 24.98 |
| Dr. Reddys | 19.01 | 3.12 | 16.85 | 11.44 | 15.11 | 24.32 |

## உரிமை பங்குதாரர் முறை:–


QOQ Change | Total Shareholdings




*Showing Windlas Biotech Shareholding as on Dec 2025*

| CATEGORY | DEC 2025 | SEP 2025 | JUN 2025 | MAR 2025 |
|---|---|---|---|---|
| Promoters | 61.99 | 61.99 | 62.34 | 62.34 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 0.93 | 1.10 | 1.44 | 1.52 |
| DII | 11.44 | 11.44 | 11.21 | 10.89 |
| Mutual Funds | 6.63 | 6.39 | 6.80 | 6.70 |
| Others | 25.64 | 25.47 | 25.00 | 25.25 |

QOQ Change | Total Shareholdings




*Showing Shareholding as on Dec 2025*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 1,30,65,352 | 61.99 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 1,96,399 | 0.93 % | ↓-0.17 |
| DII | 24,10,794 | 11.44 % | 0.00 |
| MF | 13,97,293 | 6.63 % | ↑0.24 |
| Others | 54,04,694 | 25.64 % | ↑0.17 |

## மியூச்சுவல்ஃபண்ட் பங்குதாரர் முறை:–

**ICICI Pru Pharma Healthcare and Diagnostics (P.H.D) Direct-G**

Equity: Sectoral-Pharma

★★★★★

| 68.19 | 1.06% | 0% |
|---|---|---|
| Amount Invested ( in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

**ICICI Pru Smallcap Direct-G**

Equity: Small Cap

★★★☆☆

| 20.79 | 0.25% | 0% |
|---|---|---|
| Amount Invested ( in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

**UTI Healthcare Direct-G**

Equity: Sectoral-Pharma

★★★★☆

| 12.46 | 1.13% | 0% |
|---|---|---|
| Amount Invested ( in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

## எனது தனிப்பட்ட பார்வை:–

உள்நாட்டு மருந்து ஒப்பந்த மேம்பாடு மற்றும் உற்பத்தி அமைப்பில் (CDMO) முதல் ஐந்து நிறுவனங்களில் ஒன்றாக நிறுவனம் உள்ளது. அடிப்படைகள் மற்றும் நிதி அளவுருக்கள் ஒட்டு மொத்தமாக நல்லது. தனிப்பட்ட ஆய்வின்படி, நடுத்தர கால (8 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரை) முதல் நீண்ட கால

(24 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரை) முதலீட்டிற்கு எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் நன்றாக இருக்கிறது. நடுத்தர காலத்தில் 1300+ ஐக் காணலாம். எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் நீண்ட காலத்திற்கு 1800+ ஐ எதிர்பார்க்கிறேன்.

## இந்த மாதம் குறுகிய கால பங்கு பரிந்துரைகள்.

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **ITC Ltd...**
**Entry 300 to 310. Add more around 260.**
**Target 360 and 400.**

2, **Oil and Natural Gas Corporation Ltd..**
**Entry 260 to 270. Add more around 220.**
**Target 320 and 350.**

3, **Tata Consultancy Services Ltd...**
**Entry 2600 to 2700. Add more around 2200.**
**Target 3000 and 3300.**

4, **Jio Financial Services Ltd...**
**Entry 260 to 270. Add more around 220.**
**Target 300 and 330.**

5, **NMDC Ltd...**
**Entry 78 to 80. Add more around 60.**
**Target 95 and 120.**

6, **Tata Motors Passenger Vhcls Ltd...**
**Entry 370 to 380. Add more around 320.**
**Target 420 and 460**

7, **Triveni Turbine Ltd...**
**Entry 480 to 490. Add more around 400.**
**Target 520 and 570.**

8, Bajaj Healthcare Ltd...
Entry 350 to 360. Add more around 300.
Target 390 and 430.

9, Savita Oil Technologies Ltd...
Entry 350 to 360. Add more around 300.
Target 390 and 440.

10, Sai Silks (Kalamandir) Limited…
Entry 110 to 115. Add more on down till 90.
Target 140 and 160.

11, Gujarat Pipavav Port Ltd...
Entry 170 to 175. Add more around 140.
Target 200 and 220.

12, Tata Power Company Ltd…
Entry 360 to 370. Add more on down till 310.
Target 420 and 460.

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram

# ஆறுபடை வீடழகன்...



வேல் வேல் முருகா வேல் முருகா
வேல் வேல் முருகா வேல் முருகா

வேலும் மயிலும் அசைந்தாட
வேலன் முருகன் நின்றாட
சீறும் நாகம் உடனாட
வேதனை யாவும் பறந்தோட ....(வேல் வேல் முருகா)

முத்தமிழ் பிரியனே முருகையா
செம்பவழ இதழ் சிரிப்பையா
சொக்கன் மகனே சுப்பிரமணியா
பெயர் செப்பிட நாவும் இனிக்குதையா .... (வேல் வேல் முருகா)

பழனி மலையில் ஆண்டியடா
பழமுதிர் சோலை வேலனடா
செந்தூர்கடல் அலை வாசனடா
சுவாமி மலையில் ஆசானடா .....(வேல் வேல் முருகா)

தணிகை மலையில் மணவாளன்
தனிப்பெரும் திருப்புகழ் பொருளாளன்
பரங்குன்றம் ஆளும் பாவேந்தன்
பக்தர்க்கு என்றும்
துணையாவன்.....(வேல் வேல் முருகா)



–அரு.சிவகாமி இராமநாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

# உங்கள் கர்மா என்ன..
# வேலையா..தொழிலா...?

-ஜோதிடர் எல்லி
9894176494

வினை என்பதற்கு இணையான வேறொரு சொல் கர்மா!

"கர்மமே கண்ணாயினார் " குமரகுருபரர் எழுதிய நீதிநெறி விளக்கப்பாடலில் மேற்கண்ட தொடரை காணலாம்.

வினை – கர்மா இரண்டும் ஒரு பொருள் குறித்தவையே .



"கடமையை செய் பலனை எதிர்பாராதே "– என்பது கண்ணனின் வாக்கு அதாவது பலனின் மீது பற்று வைக்காதே அதைப்பற்றி சிந்தித்து வருந்தாதே என்பதான விளக்கம் அது.

இது போர் முனையில் குழப்பம் கொண்ட அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்யும் பொருட்டு கூறப்பட்டது.

உனக்கான கடமையை நீ செய்தே ஆக வேண்டும் அவரவர் கர்மா வில் இருந்தும் அதன் விளைவுகளில் இருந்தும் எவரும் தப்ப இயலாது எனவே அதிலிருந்து தப்பிக்க முயற்சிக்க வேண்டாம் வருவதை அனுபவிக்க வேண்டும் என்பதே நிதர்சனம் ஆகும்.

இந்த கர்மவினைகளை ஜோதிட சாஸ்திரம் எப்படி வெளிப்படுத்துகிறது என்பதை இனி பார்ப்போம்.

ஜாதகருக்கு விதிக்கப்பட்ட தொழில், அவர் செய்தே ஆக வேண்டிய கடமை இவற்றை உணர்த்துவது கர்ம ஸ்தானம் எனப்படும் 10ம் பாவகம் ஆகும்.




பிறரிடமோ, அல்லது ஒரு நிறுவனத்திலோ வேலை செய்து ஊதியம் பெறுவதை லக்னத்திற்கு ஆறாம் வீடு குறிக்கிறது.

சொந்த நிறுவனம் வைத்து நடத்துவது அல்லது பிறர் உதவியின்றி தாமாக செய்யும் தொழில்(உதாரணமாக ஆசிரியர், ஜோதிடர், ஆலோசகர்கள், கணக்காளர்கள், வழக்கறிஞர்கள்) இவற்றை குறிப்பது பத்தாம் வீடு.

வேலை தொழில் இவற்றை தவிர்த்து ஒருவரின் கடமைகளையும், சேவைகளையும் இந்த பாவகம் சொல்கிறது.

பூர்வ புண்ணிய ஸ்தானமான ஐந்தாம் வீட்டிற்கு ஆறாம் பாவகம் தான் இந்த கர்ம ஸ்தானம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே முன் ஜென்ம வினைகள் தான் கர்ம ஸ்தானத்தோடு தொடர்பு கொண்டு நமக்கான வேலை தொழிலை நிர்ணயம் செய்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

பத்தாம் வீட்டின் அதிபதி பத்தாம் பாவகத்தில் நிற்கும் கிரகங்களின் காரகங்கள் சார்ந்து ஜாதகரின் வேலை தொழில் அமையும். அந்த கிரக காரகத்துவம் சார்ந்த விசயத்தில் ஜாதகரின் மனம் போகும்.

பத்தில் கிரகங்கள் இன்றி வெற்றிடமாக இருப்பது சிறப்பு இல்லை இங்கே ஜாதகரது தொழிலை குறிப்பிட்டு எளிதாக கண்டறிய முடியாது. இப்படியான ஜாதகங்களில் ஆறாம் இடம் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆறாம் வீடு மற்றும் பத்தாம் வீடுகளில் கிரகங்கள் இருப்பது ஜாதகரின் கர்ம வினைகளை அதீதப்படுத்துகிறது இந்த அமைப்புள்ள ஜாதகர்கள் சில காலங்களில் பிறரிடம் சம்பளத்தை எதிர்பார்த்து வேலை பார்ப்பதும் மற்ற சமயங்களில் சொந்தமாக தொழில் செய்து வாழ்ந்து வருவதையும் காணலாம்.

இவை அந்த கிரகங்களின் தசா புத்தி காலங்களில் நடைபெறும்.

கேந்திர ஸ்தானமான நாலாம் வீடு பத்தாம் பாவகத்திற்கு நேரடியாக சம்மந்தம் கொள்வதால் அதனையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பலன்கள் சொல்லலாம்.

ஜாதகத்தில் தொடர்பில்லாத துறைகளை மனம் காட்டிய வழியில் தேடிச் சென்று வேலை செய்யும் சிலருக்கு எந்த விதமான பலன்கள் இன்றி குழம்பி தடுமாறும் நிலை உருவாகும்.

11ம் பாவகம் தொழிலின் மூலம் கிடைக்கும் வருவாயை குறிக்கும்.



சுப கிரகங்கள் ஜாதகரை கர்மா செய்வதில் இருந்து விலக்குகிறது இதனால் அந்த கிரக தசா வில் பெரிதாக வேலையின்றி ஜாதகர் இருப்பதை உணர முடியும்.
உதாரண கிரமாக குரு பகவானை சொல்லலாம்.

இயற்கை பாவர்கள் பத்தில் பலம் பெறும் போது ஜாதகரின் கர்மா பல மடங்கு அதிகமாக செயல்படுவதால் ஜாதகர் பரபரப்பாக வேலைகளில் ஈடுபடுவார்.

இதை அறிந்து தான் ஜோதிட ஆசிரியர்கள் பத்தில் ஒரு பாவியாவது இருத்தல் அவசியம் என்று வலியுறுத்துகிறார்கள்.

ஆறிலும் பத்திலும் கிரகங்கள் இல்லாவிட்டாலும் ஆறு மற்றும் பத்தாம் வீடுகளை பார்வையிடும் கிரகங்களை வைத்து வைத்து வேலை, தொழிலினை அறியலாம்.

வக்கிர கிரகங்கள் பத்தில் அமையப்பெற்ற ஜாதகர்கள் இடை விடாது ஓய்வின்றி வேலை செய்யும் மனோபாவம் கொண்டவர்களாக இருப்பார்கள்.



ஒன்றிற்கு மேற்பட்ட கிரகங்கள் பத்தாம் வீட்டில் அமரும் போது ஜாதகர் பல துறைகளில் கால் பதிப்பார், கிரகங்களின் வலிமை யோகம் பொறுத்து அதில் சில துறைகளில் அவர் தடம் பதிக்கலாம்.

உடலுழைப்பு க்கு காரகனான சனி பகவான் பத்தாம் வீட்டோடு சம்மந்தம் கொள்கிற ஜாதகர்கள் கடின உழைப்பை வெளிப்படுத்துவார்கள் நாள் முழுவதும் தொடர்ந்து வேலை செய்ய விருப்பம் கொண்டவர்கள் இவர்கள் தான்.

பத்தாமிடத்தில் அமர்ந்த சனி பகவான் செவ்வாயுடன் தொடர்பு கொள்ளும் போது ஆயுத பிரயோகம் சார்ந்த தொழில், இயந்திரங்கள் சம்மந்தப்பட்ட தொழில்கள் ஜாதகருக்கு ஏற்படும். இந்த சேர்க்கையை குரு பகவான் பார்வை செய்வது சிறப்பு. இதில் சனியோ செவ்வாயோ லக்ன அசுபராக இருப்பது ஆதிபத்யம் பொறுத்து சில கஷ்டங்களை கொடுக்கும்.

பத்தில் நீசம் பெற்ற கிரகங்கள் இருப்பதும் பத்தாம் அதிபதி நீசம் பெறுவதும் வேலையில் தடைகள், இடைவெளி உண்டாகும்.

பத்தாம் வீட்டின் அதிபதி எட்டாம் பாகவத்தோடு தொடர்பு கொள்வது வேலையில் கடின உழைப்பு தேவைப்படுகிறது.

பத்தில் கிரகங்கள் இல்லாத நிலையில் 10 அதிபதி தான் நிற்கும் இடத்தின் தன்மை தன்னோடு சேர்ந்த கிரகங்கள், நட்சத்திர சாரம் பொறுத்து வேலையினை அமைத்து கொடுப்பார்.



10 ம் அதிபதி அஸ்தமனம் அடைந்து 10 மற்றும் ஆறாம் வீடுகளில் கிரகங்கள் இல்லாத நிலையில் ஜாதகர் நிரந்தர வேலையின்றி அலைக்கழிக்கப் படுவார்.

நிழல் கிரகமான ராகு 10ல் நிற்கும் ஜாதகருக்கு வாழ்வில் தொடர்ந்து வேலை என்பது கட்டாயம் தொடர்ந்து கொண்டே இருக்கும். வெளிநாட்டு வேலை வேற்று மத,மொழி இன ஆட்கள் மூலமும் வேலை கிடைக்கும்.

சூரியன் அமர்வது அரசு அரசியலில் ஆர்வம் கொள்ளச் செய்யும்.

செவ்வாய் இருப்பது மேலாளர், இதர பணியார்களை வழி நடத்துபவராக ஜாதகரை கொண்டு செல்லும். பத்தாமிட செவ்வாய் லக்னத்தோடும் சம்மந்தம் கொள்வதால் ஜாதகர் வேகமாக செயல்திறன் திறனும் உள்ளவராக இருப்பார்.

சூரியனும் செவ்வாயும் சேர்ந்து பத்தில் அமரும்போது என்ன நேரும் எனில்,சூரியன் அரசன் ஆவார் செவ்வாய் தளபதிக்கு நிகராவர் இங்கே ஜாதகர் வேகமாகவும் எவருக்கும் அடி பணியாத தன்மையும் கொண்டவராக காணப்படுவார். இந்த அமைப்பு உள்ளவர்கள் பிறரிடம் வேலைபார்ப்பது கடினம் சுய தொழிலும் அதிக வேகம் ஈடுபாடு உள்ளவராகவே இருப்பது சக ஊழியர்களுக்கு ஜாதகரோடு ஈடு கொடுக்க முடியாத சூழல் நிலவும்.

மீண்டும் மற்றுமொரு ஜோதிட தகவலுடன்
அடுத்த இதழில் சந்திப்போம்.

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர் தொடர்புக்கு : 9894176494



# Carbon capture and storage (CCS) Carbon Credits.



– கார்த்திக் முத்தப்பன்
நகரத்தார் கேப்பிட்டல்



**CC (Carbon Credit),**
**CCS (Carbon Capture and Storage),**
**CCU (Carbon Capture and Utilisation),**

**மற்றும் CDR (Carbon Dioxide Removal) - சென்ற இதழ் தொடர்ச்சி**

**## CCS (Carbon Capture and Storage),**
**CCU (Carbon Capture and Utilisation) = CCUS**
**(Carbon Capture Utilisation and Storage)**

கார்பன் பிடிப்பு, அகற்றுதல் மற்றும் சேமிப்பு (CCUS) பங்குகளில் முதலீடு செய்வது, வலுவான அரசாங்க கொள்கை ஆதரவு, குறைக்க கடினமாக இருக்கும் தொழில்களில் சந்தை வளர்ச்சி மற்றும் உலகளாவிய நிகர–பூஜ்ஜிய உமிழ்வு இலக்குகளை அடைவதில் இந்த தொழில்நுட்பங்கள் வகிக்கும் முக்கிய பங்கு ஆகியவற்றால் இயக்கப்படும் நன்மைகளை வழங்குகிறது.

கீழே உள்ள "CC (Carbon Credit), CCS (Carbon Capture and Storage), CCU (Carbon Capture and Utilisation), மற்றும் CDR (Carbon Dioxide Removal)"தொடர்புடைய வணிக நிறுவனங்கள் / பங்கு குறிப்புகள், வரும் நாட்களில் இந்தப் பங்குகளில் முதலீடு செய்வது நல்ல லாபம் பெற, செல்வத்தை உருவாக்கக்கூடும்.

## CC (Carbon Credit) தொடர்புடைய வணிக நிறுவனங்கள்.

- **EKI Energy Services Ltd (EnKing International):**
  **A leader in carbon credit development, trading, and sustainability advisory services.**
- **PCBL Ltd (Phillips Carbon Black Ltd):**
  **India's largest carbon black manufacturer, which produces and trades carbon credits.**
- **Hi-Green Carbon Ltd:**
  **Involved in carbon black manufacturing and waste-to-energy initiatives.**
- **Goa Carbon Ltd:**
  **Specialized in manufacturing calcined petroleum coke, a carbon-related product.**
- **Himadri Speciality Chemical Ltd :**
  **Produces carbon black and materials for lithium-ion batteries.**
- **Rain Industries Ltd :**
  **A major producer of carbon products for industrial use.**
- **Adani Green Energy :**
  **A significant player in renewable energy (solar/wind), which generates carbon offsets.**

## CCS (Carbon Capture and Storage) தொடர்புடைய வணிக நிறுவனங்கள்

- **EKI Energy Services Ltd (NSE: EKI):**
  **A major player in the carbon credit trading and sustainability consulting market.**
- **Himadri Speciality Chemical Ltd (NSE: HSCL):**
  **Produces carbon black and advanced materials used in various industrial applications.**
- **PCBL Ltd (NSE: PCBL):**
  **India's largest carbon black manufacturer, which also focuses on energy generation from production by-products.**
- **Rain Industries Ltd (NSE: RAIN):**
  **Engaged in producing commodities like Calcined Petroleum Coke (CPC).**
- **Goa Carbon Ltd (NSE: GOACARBON):**
  **A major producer of Calcined Petroleum Coke in India.**
- **Hi-Green Carbon Ltd (NSE: HIGREEN):**
  **Involved in the carbon chemicals space.**

## CCU (Carbon Capture and Utilisation) தொடர்புடைய வணிக நிறுவனங்கள்.

- **Thermax Ltd (NSE: THERMAX):**
  **A prominent player in the space, Thermax has partnered with HPCL for CCUS projects and has benefitted from a ₹20,000 crore government push for CCUS infrastructure, making it a key player in industrial-scale carbon capture.**
- **Praj Industries Ltd (NSE: PRAJIND):**
  **Focuses on decarbonization, with specialized technologies for converting industrial $CO_2$ emissions into value-added products like green fuels and materials (CCU).**

- **Reliance Industries Ltd (NSE: RELIANCE):**
  **Investing heavily in new energy technologies, including carbon capture and utilization as part of its sustainability goals.**

- **Larsen & Toubro Ltd (NSE: LT):**
  **Involved in EPC (Engineering, Procurement, and Construction) services for high-tech manufacturing, including carbon capture projects.**

## CDR (Carbon Dioxide Removal) தொடர்புடைய வணிக நிறுவனங்கள்.

- **PCBL Ltd (Phillips Carbon Black Limited):**
  **India's largest carbon black manufacturer, which produces carbon black for tires and rubber, while also utilizing production by-products for energy generation.**

- **Himadri Speciality Chemical Ltd (HSCL):**
  **Manufactures coal tar pitch and advanced carbon materials used in lithium-ion batteries and specialty applications.**

- **Rain Industries Ltd:**
  **A commodity chemical company involved in carbon products.**

- **Goa Carbon Ltd:**
  **Primarily involved in the manufacturing of calcined petroleum coke.**

- **Hi-Green Carbon Ltd:**
  **Involved in commodity chemicals and carbon black.**


- **EKI Energy Services Ltd:**
  **A major carbon credit developer and supplier, facilitating carbon offset projects.**

- **GE Power India: Listed as having significant activity related to carbon fund/energy transition.**

- **Inox India:**
  **Involved in cryogenic equipment, which is critical for transporting liquified CO2.**

# அடுத்த இதழில்....

## கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் )
## நகரத்தார் கேப்பிட்டல் – எழுதும்



**கிரீன்(பசுமை அல்லது மறுசுழற்சி) தங்கம் / வெள்ளி**
**ஒரு விரிவான அலசல் – நிதி மேலாண்மை பகுதியில்**

# வாழ்த்தி மகிழ்வோம்...

**அன்பார்ந்த வாசகர்களே..**

நமது மின்னிதழில் வாழ்த்தி மகிழ்வோம் பகுதியில் வாசகர்கள் இனி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் திருமணம், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் இன்னும் பல இனிமையான தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் வாசகர்களோடு பகிர்ந்து மகிழலாம்.

**அட்டைப்படம் மற்றும் இதழில் ஒரு பக்க செய்திக்கான கட்டணம் : ரூபாய் 3000 மட்டும்**

**இதழில் ஒரு பக்கச்செய்தி : ரூபாய் 500 மட்டும்**

இனிய தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் குடும்பங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தங்களது இல்ல நிகழ்வுகளை வெளியிட இதழின் மின்னஞ்சல் முகவரி**
naamnagarathar@outlook.com
**அல்லது**
96590 32994 என்ற
**எண்ணில் தொடர்பு கொள்ளவும்**

# நாம் நகரத்தார்

**சமூக இணையதள மின்னிதழ்**

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com